**பண்டாரகம பிரதேச சபை**
**களுத்துறை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2018 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2019 ஒக்தோபர் 12 ஆந் திகதி வரையிலும் சமர்ப்பிக்கப்படாதிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கொடுக்கல் வாங்கல் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் சுருக்கமான அறிக்கை 2019 ஒக்தோபர் 30 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2019 ஒக்தோபர் 29 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

## 2. இணங்காமைகள்

### 2.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமானங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் | | | | |
| (i) 134(1) ஆம் பிரிவு | | அபிவிருத்தி செய்யப்பட்ட பிரதேசங்களாக பிரதேச சபையினால் வெளியிடப்பட்ட பிரதேசங்களில் புதிய கண்டுபிடிப்புக்கள் மேற்கொள்ளப்படவில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டின் போது சபை அங்கீகாரம் பெறப்பட்டது. எதிர்காலத்தில் அது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ii) | 160 ஆம் பிரிவு | - | நிலுவை ஆதனவரி அறிவிடலின் இறுதிப் படிமுறையாக ஆதனங்கள் தடைசெய்யப்பட்டிருக்க வில்லை. | அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் உரிய பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஆ) | 1988 இன் பிரதேச சபைகள் (நிதி மற்றும் நிர்வாகம்) விதி 218 | - | சபைக்குச் சொந்தமான சகல காணியும் கட்டிடங்களும் ஆண்டிற்கு ஒருமுறையேனும் பரீட்சிப்பிற்கு உட்படுத்தப்பட்டிருக்க வில்லை. | விதியின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2019 ஆம் ஆண்டு முதல் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணம் | | | | |
| (i) | நிதிப்பிரமாணம் 371(இ) | 3,813,717 | ஏதாவதொரு பணிக்காக வழங்கப்பட்ட முற்பணம் குறித்த பணி நிறைவு பெற்றதும் உடனடியாக தீர்க்கப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு செய்யப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | தகவல்கள் வழங்கப்படவில்லை. |
| (ii) | நிதிப்பிரமாணம் 571(1) மற்றும் (2) | 17,340,446 | காலாவதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடமவடிக்கை எடுக்கப்படவில்லை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3. வருமான நிர்வாகம்

-----------------------------------

### 3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

-----------------------------------

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | வருமானம் | 2018<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | 2018<br>சிட்டையிடப்பட்ட வருமானம் | 2018<br>சேகரிக்கப்பட்ட வருமானம் | 2018<br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2017<br>மதிப்பிடப்பட்ட வருமானம் | 2017<br>சிட்டையிடப்பட்ட வருமானம் | 2017<br>சேகரிக்கப்பட்ட வருமானம் | 2017<br>திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீதவரியும் வரியும் | 7,089,250 | 7,355,279 | 4,384,441 | 2,970,838 | 6,314,000 | 7,370,955 | 8,152,177 | 1,119,653 |
| (ii) | வாடகை | 1,142,750 | 1,578,886 | 1,641,566 | (62,679) | 1,422,000 | 1,528,500 | 1,527,480 | 118,285 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 236,250 | 532,200 | 532,200 | - | 296,000 | 337,650 | 337,650 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 29,633,625 | 29,633,625 | 6,807,958 | 32,292,032 | 21,662,000 | 6,937,252 | 75,388,820 | 58,632,272 |

## 3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

### (அ) வீதவரியும் வரியும்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஒக்தோபர் 28 ஆம் திகதி வரையில் அறவிட வேண்டிய மொத்த நிலுவை ரூபா 263,703 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### (ஆ) வியாபார வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அதிகாரிபத்து உப அலுவலகத்திதல் 02 வியாபார நிலையங்கள் மெய்மையாய்வில் தவறவிடப்பட்டிருந்ததுடன் அந்த நிறுவனங்களிலிருந்து வியாபார வரி அறவிடலும் இடம்பெறவில்லை. | உரிய பிரகாரம் வியாபார வரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் |

## 3.3 வியாபார அனுமதிப்பத்திரம்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகாரிபத்து உப அலுவலக எல்லையில் காணப்படுகின்ற 15 வியாபார நிறுவனங்களுக்கு வியாபார அனுமதிப்பத்திரம் வழங்கப்படவில்லை. | வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் |
| (ஆ) | மெய்மையாய்விற்கு உட்படுத்தப்பட்ட 205 வியாபார நிலையங்களில் 69 இற்காக வியாபார அனுமதிப் பத்திரம் வழங்கப்படவில்லை. | வியாபார அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம் |

## 3.4 கடை வாடகை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2014 ஆம் ஆண்டின் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட புதிய சந்தைத் தொகுதியின் மேல்மாடியில் 08 கடைகளை வாடகைக்கு வழங்குவதற்காக 2015 ஆம் ஆண்டின் போது வாடகையாளர்கள் தெரிவு செய்யப்பட்டு மாதாந்த வாடகை தீர்மானிக்கப்பட்டிருந்த போதும் வாடகைக்கு வழங்கல் 2019 மார்ச் மாதம் வாடகைக்கு வழங்குதல் தாமதமானமையின் காரணமாக சபைக்கு ரூபா 915,600 தொகையான வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | உரிய பிரகாரம் வருமானம் சேகரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். இந்த பணம் தற்போது அறவிடமுடியாதுள்ளது. |

**3.5 தொலைத்தொடர்பு கோபுர வருமானம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| அதிகாரிபத்து உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற 04 தொலைத்தொடர்பு கோபுரங்களில் இருந்து எந்த வித அனுமதிப்பத்திரக் கட்டணமும் அறவிடப்படவில்லை. | அனுமதிப் பத்திரக் கட்டணம் உரிய அறவிடப்பட வேண்டும். | பரீட்சித்து எதிர்காலத்தில் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 10,034,557 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 12,574,342 ஆகும். | நிலுவை வருமானம் அறவிடப்பட வேண்டும். | அறவிடுவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கப்படும். |

**4. செயற்பாட்டு மீளாய்வு**

**4.1 செயலாற்றல்**

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) உப விதிகள் | | |
| பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 வது பிரிவின் கீழ் 16 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் விதிக்கப்பட வேண்டிய போதிலும் 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் | பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் உப விதிகளை விதிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் 05 பிரதான விடயங்களுக்காக மாத்திரம் உப விதிகள் விதிக்கப்பட்டிருந்தன. | | |
| (ஆ) | செயல்நடவடிக்கைத் திட்டம்<br>---------------------------------------------- | | |
| (i) | 2014 பெப்ரவரி 14 ஆம் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 3(ஆ) பிரிவின் பிரகாரம் வருடாந்த பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முன்னுரிமையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் பௌதீக வீதிகளின் கீழ் மூலதனச் செலவினம் மற்றும் மூலதனச் சொத்துக்களை பழுது பார்த்தலும் பராமரித்தலும் இற்காக ஏற்படுத்தப்பட்ட ரூபா 50.41 மில்லியன் நிதி ஏற்பாட்டிற்கான செயற்திட்டம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் இனங்காணப்பட்டு அமுல்படுத்தப்படவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரிசெய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ii) | செயல் நடவடிக்கைத் திட்டத்தில் எதிர்பார்த்த பூர்த்தி மற்றும் விளைவுகளின் பிரகாரம் செயலாற்றல் மதிப்பீடு செய்யப்பட வேண்டிய போதிலும் அந்த செயற்பாடுகளுக்காக வருடாந்த செயலாற்றல் அளவை முறையொன்று சபையிடம் காணப்படவில்லை. | செயலாற்றலை அளவிடும் முறையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | ஏற்றுக்கொள்கின்றோம். எதிர்காலத்தில் முறையொன்று தயாரிக்கப்படும். |
| (இ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம்<br>------------------------------------------ | | |
| | கழிவுப் பொருள் முகாமைத்துவம் தொடர்பாக உப விதியொன்று விதிக்கப்படாதிருந்ததுடன் கழிவுப் பொருள் கிரயத்தைக் குறைப்பதற்காக கழிவுப்பொருள் வரி விதித்தலும் மேற்கொள்ளப்படவில்லை. | உப விதியொன்று விதிக்கப்பட வேண்டும். | உப விதி மற்றும் கழிவுப் பொருள் வரி என்பவற்றை விதிப்பதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

| | | |
|---|---|---|
| 2030 இன் நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை 2018 ஆம் ஆண்டின் மத்திய அரைப் பகுதியில் அறிந்திருந்ததுடன் இந்த நோக்கங்களுக்கு இணங்க 2018 ஆம் ஆண்டின் போது நீண்ட காலத்திட்டம் தயாரிக்கப்படவில்லை. | நீண்ட காலத்திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4.2 மனித வள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் பதவியணியினர் தகவல்களின் பிரகாரம் 2019 செப்தெம்பர் 06 ஆந் திகதி வரையில் இரண்டாம் நிலையில் 03 வெற்றிடங்களும் மற்றும் ஆரம்ப நிலையில் 08 வெற்றிடங்களும் காணப்பட்டதுடன் ஒரு முகாமைத்துவ உதவியாளர் பதவி வெற்றிடமாகக் காணப்பட்டது. | ஊழியர் வெறறிடங்கள் நிரப்பப்பட வேண்டும் | ஆட்சேர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

## 4.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) பிரைம்லேண்ட் தனியார் கம்பனியால் 2018 ஆம் ஆண்டின் போது ஏலத்தில் விற்பனை செய்யப்பட்ட கொஸ்கஹவத்த நொஹொத் குருந்துகஹவத்த காணியில் சபைக்கு ஒதுக்கப்பட்டிருந்த 01 ரூட் 25.14 பேர்ச் அளவான காணியில் எல்லையில் வேலி அமைத்து சபையின் சொத்தாக ஒதுக்கப்படவில்லை. | எல்லை வேலி அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எல்லை வேலி அமைப்பதற்கு உரிய நிறுவனத்திற்கு அறிவிக்கப்படடுள்ளது. |
| (ஆ) 2018 திசெம்பர் இல் கிதெல்பிட்டிய, கெந்தலந்த ஏலவிற்பனைக் காணியில் | கையளித்தலுக்குரிய உடன்படிக்கை மற்றும் உரித்துறுதி | உரித்துறுதி மற்றும் உடன்படிக்கை பெற்றுக்கொள்வதற்கு |

| | | |
|---|---|---|
| பொது வசதிகளுக்காக ஒதுக்கப்பட்ட காணியில் 106 பேர்ச் அளவு களுகங்கை நீர் செயற்திட்டத்திற்காக கையளிக்கப்பட்டதுடன் கையளிப்பதற்குரிய உரித்துறுதி மற்றும் உடன்படிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. | சமர்ப்பிக்கப்பட வேண்டும். | நடவடிக்கை எடுக்கப்படவில்லை. |

## 4.4 பெறுகை

### 4.4.1 பெறுகைத் திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் 4.2.1 ஆம் பிரிவின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்படவில்லை. | தேசிய பெறுகை வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் பெறுகைத் திட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் முறையான பெறுகைத் திட்டம் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். |

### 4.4.2 ஒப்பந்த நிர்வாகம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) வீதிகளை நிர்மாணிக்கும் போது ABC கலவையைப் பயன்படுத்தி கலவை விகிதத்தின் தரப்பரிசோனை அறிக்கைகளின் உறுதிப்படுத்தாமல் அதிகரித்த விலை வீதத்தில் செலுத்தப்பட்டிருந்தது. மேலும் வடிகாண் மற்றும் மதகுகளை நிர்மாணிப்பதற்காக பயன்படுத்தப்படுகின்ற கொங்கிரீட் கலவைகளின் விகிதம் பரீட்சிக்கும் முறையொன்று இன்றி ரூபா 1,885,892 தொகையான 06 ஒப்பந்தங்களுக்காக செலுத்தப்பட்டிருந்தது. | கொங்கிரீட் கலவை ABC மற்றும் கலவை விகிதம் தயாரிக்கும் முறைமையொன்று தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | நிர்மாணங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது ஒப்பந்த சங்கத்தின் உத்தியோகத்தரும் சபையின் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரும் இணைந்த கணக்குகளைப் பெற்று இறுதிக் கொடுப்பனவுகள் உறுதிப்படுத்தப்பட வேண்டிய போதிலும் அவ்வாறு அளவிடைப் பத்திரம் பெற்றுக்கொள்ளப்படாமல் 04 வேலைகளுக்காக ரூபா 3,753,353 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | ஒன்றிணைந்த அளவிடைகளைப் பெறுவதற்கு நடவடிக்கை வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (இ | ஒப்பந்தகார சங்கத்தினால் வழங்கப்படுகின்ற மூலப்பொருட்களைப் பரீட்சிக்கும் முறைமையொன்று இன்றி மூலப்பொருளுக்காக 05 ஒப்பந்த சங்கங்களுக்கு ரூபா 2,203,331 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | மதிப்பீட்டுடன் பொருள் பகுப்பாய்வைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஈ) | அருக்கொட ஶ்ரீ இந்திராசார மாவத்தையில் தெம்பஹுவத்த வீதியை அபிவிருத்தி செய்வதற்காக ரூபா 497,318 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் 2019 யூலை 25 ஆம் திகதிய பௌதீக பரிசோதனையின் போது வீதியில் கல் வெளிப்பட்டு தரம் குறைந்த நிலையில் காணப்பட்டது. | வீதிகளை நியமங்களின் பிரகாரம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் குறித்த பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படும். |